செ.வெ.எண் : 26 நாள் : 10.06.2021

**கோயம்புத்தூர் மாவட்டம்**

**மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் புதிய ஆக்சிஜன் உற்பத்தி நிலையத்தினை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் ஆகியோர் தொடங்கி வைத்தார்கள்.**

*******************

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் இன்று (10.06.2021) தனியார் பங்களிப்புடன் ரூ.65 இலட்சம் மதிப்பில் ஆக்சிஜன் உற்பத்தி நிலையத்தினை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் ஆகியோர் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., வருவாய் கோட்டாட்சியர் திரு.ரவிச்சந்திரன், இணை இயக்குநர் (மருத்துவம்) (பொ) மரு.ராஜா, அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் மரு.கண்ணன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**பின்னர் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற ஒரு மாதத்தில் இருமுறை கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு வருகைதந்து கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டதுடன், இ.எஸ்.ஐ மருத்துவமனைக்கு நேரடியாக வருகைபுரிந்து சிகிச்சையளிக்கும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு உற்ச்சாகம் அளிக்கும் வகையில் தன் உயிரைக்கூட பொருட்படுத்தாமல் முழுகவச உடையணிந்து அங்கு தீவிரசிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரடியாக சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்கள்.

மேலும், மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர், மாண்புமிகு நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் என பல்வேறு அமைச்சர்களை தொடர்ந்து கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு அனுப்பி கொரோனா வைரஸ் புதிய தொற்றுக்கள் கட்டுப்படுத்தும் நடவடிக்களை தீவிரப்படுத்திட அறிவுறுத்தினார்கள். இதுபோன்ற தொடர் நடவடிக்கைகளால் கோயம்புத்தூர் மாவட்டத்தில் நாளொன்றுக்கு சுமார் 4500 வரை கண்டறியப்பட்ட புதிய தொற்றுக்கள், தற்போது பாதியாக குறைந்து நாளொன்றுக்கு சுமார் 2300 நபர்கள் வரை பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அதபோலவே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் மாவட்டம் முழுவதிலும் 13 சிறப்பு சிகிச்சை மையங்களில் சுமார் 7000த்திற்கும் அதிகமான படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டம் சுமார் 38 இலட்சம் மக்கள்தொகை கொண்ட மாவட்டம் ஆகும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரசின் பல்வேறு சிறப்பு நடவடிக்கைளுக்கு தனியார் நிறுவனங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அதிகளவில் உதவி வருகின்றார்கள். அதன் ஒருபகுதியாக இன்று மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் ஆக்சிஜன் தேவையினை பூர்த்தி செய்யும் விதமாக, தனியார் பங்களிப்புடன் ரூ.65 இலட்சம் மதிப்பில் ஆக்சிஜன் உற்பத்தி நிலையம் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நிமிடத்திற்கு 300லிட்டர் ஆக்சிஜன் உற்பத்தி செய்யலாம். ஒரே நேரத்தில் 60நோயாளிகளுக்கு 24மணி நேரமும் ஆக்சிஜன் வழங்கி சிகிச்சையளிக்க இயலும். இம்மையத்தின் மூலம் 95சதவிகிதம் ஆக்சிஜன் உற்பத்தி செய்யலாம்.

அரசு பல்வேறு தொற்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போதிலும், பொதுமக்கள் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளான முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியினை பின்பற்றுதல்

உள்ளிட்டவற்றினை கடைபிடிக்கும் போது, நிச்சயம் கோயம்புத்தூர் மாவட்டம் கொரோனா தொற்றில்லா மாவட்டமாக விரைவில் திகழும். மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு ஆக்சிஜன் உற்பத்தி நிலையம் அமைத்துக் கொடுத்த தனியார் நிறுவனத்தினருக்கும் வாழத்துக்களையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன் **என மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் தெரிவித்தார்.**

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**